# சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
## பாடசாலை வாராந்த வேளைதிட்டம் - 2021
## மூன்றாம் தவணை

தரம் 13

**சித்திரக்கலை** | **6ம் வாரம்**

தேர்ச்சி மட்டம்: 6.4, 6.5, 6.6

❖ **தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சரியான விடையை படங்களிலிந்து தெரிவு செய்து விடையளிக்குக.**







A B C D E

1. A எனும் ஒளிப்படத்தில் வெளிப்படுத்தியுள்ள விசேட பண்பானது
   1. தொழில் துறையின் அடிப்படைப் பண்புகளான இயக்கம், வேகம் என்பன இவ்வோவியத்தின் மூலம் வெளிபபடுத்தியுள்ளது.
   2. கேத்திரகணித தளவடிவங்களும் இயற்கையான உருவங்களும் பயன்படுத்தியுள்ளன.
   3. கண்டிஸ்கியின் ஒழுங்கமைப்பு 7 எனும் ஓவியமாகும்.
   4. கண்டிஸ்கியின் கருத்து நிலையான வடிங்களின் அரூபவாத வெளிப்பாடாகும்
   5. பியெட் மொன்ரியனின இல 247 எனும் ஓவியமாகும்

2. B எனும் ஒளிப்படமானது
   1. இந்த ஓவியம் தரைத்தோற்ற காட்சி வடிவங்களால் உருவாக்கப்பட்டது.
   2. பியெட் மொன்றியன் அரூப வாத உத்தியை தீவிரப்படுத்த சிக்கலான வடிவங்கள் பயன்படுத்தியுள்ளன.
   3. இரேகைகள் வர்ணங்கள், தளம் ஆகியவற்றுக்கிடையில் தொடர்பு காணப்படுவதில்லை.
   4. இயற்கையில் உள்ள சகல பொருட்களும் எளிமையான இரேகைகள் கட்டங்களாக சுருக்கி மீள் நிரமாணம்செய்துள்ளார்.
   5. அடிப்படை வர்ணங்களுடன் தடித்த கோடுகளால் முப்பரிமாணப்பண்பு வெளிக்காட்டப்பட்டுள்ளது.

3. C எனும் ஒளிப்படத்தின் மூலம் வெளிப்படுவது
   1. ஹென்றி மூரின் அரூபவாத எண்ணக்கருவை பின்பற்றியுள்ளது.
   2. ஐரோப்பிய சிற்பக் கலையின் இயற் பண்புவாதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
   3. சலவைக்கல்லினால் கரடுமுரடான மேற்பரப்பின் தன்மை பேணப்பட்டுள்ளது.
   4. கலேஸ் நகரத்தின் தேசபற்றுடைய ஆறு நபர்களின் தியாகத்தை வெளிப்படுத்துகின்றது.
   5. ஒகஸ்தே ரொடினின் கலேஸின் சிந்தனையாளர் எனும் சிற்பமாகும்.

4. D எனும் சிற்பமானது

1. ஒகஸ்தே ரொடினின் வெண்கலத்தினால் நிர்மாணிக்கப்பட்ட அரூபநிலை சிற்பமாகும்
2. சாய்ந்திருக்கும் பெண்ஒருவரின் உடலமைப்பை அரூப வடிவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது
3. ஹென்றி மூரின் இக்கலையாக்கத்தில் இயற்பண்புகளும் அரூப வடிங்களும் பயன்படுத்தியுள்ளன.
4. பெண்ணொருவர் சிந்தனையில் மூழ்கியுள்ள நிலையில் காணப்படும் பூங்கா சிற்பமாகும்
5. வெண்கலம் மரம் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட அரூப நிலை சிற்பமாகும்.

5 . E எனும் ஒளிப்படமானது

1. தனிப்பட்ட வாழ்க்கையின் உணர்வுகள் குறியீட்டு வடிவில் குறிக்கப்பட்டுள்ளன.
2. ஹங்கேரிய - யேர்மன் தொடர்புடைய ப்ரீடா ஒருவராகவும் மக்சியன் உரிமையுடைய ப்ரீடா ஒருவராகவும் காட்டப்பட்டுள்ளது.
3. மீயதார்த்தவாதக் கலைப்போக்கு, அரூபநிலை வடிவங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
4. முள்மாலை தரித்த அழகிய இளம்பெண்ணொருவரை சித்தரிக்கப்பட்டுள்ளது.
5. ப்ரீடா காலோவினால் சித்தரிக்கப்பட்ட மெக்ஸிகன் பெண்ணொருவராவார்.

## பகுதி 11

1) அரூபகக் கலையென்பது ‘‘இனங்கண்டு கொள்ளக்கூடிய உருவமல்லாத” கட்புலக்கலையாகும்.

1.அரூபவாத ஓவியங்களை வரைந்த கலைஞர் இருவரின் பெயர்களை தருக?

2.வஸிலி கண்டிஸ்கி, பியட் மொன்றியன் ஆகியவர்களின் ஓவியங்களில் எவ்வாறு அரூபவாத கலைப்போக்கு வெளிப்படுத்தியுள்ளது என்பதை உதாரணங்களுடன் தருக?

2) ஒகஸ்தே ரொடின் என்பவர். நவீன வாத சிற்பக் கலையை அறிமுகப்படுத்தப் பெரும் பணியாற்றிய கலைஞர் ஒருவராவார்

1. ஒகஸ்தே் ரொடினின் சிற்பங்களை பெயரிடுக?
2. நவீனத்துவக் கலைக்கு ரொடினின் நிர்மாணங்கள் ஆற்றிய பங்களிப்பை விபரிக்குக?
3. ஹென்றி மூரின் சிற்பங்கள் ஒகஸ்தே ரொடினின் சிற்பங்கள் என்பவற்றுக்கிடையான வேறுபாட்டை ஒப்பிட்டு விபரிக்க?